பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 07 புதன்கிழமை 22.12.2021 கதிர் 275

## மட்டக்களப்பில் ஆணின் சடலம்

மட்டக்களப்பு தலைமைப் பொலிஸ் பிரிவில் ஆணின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

உப்போடையிலுள்ள பிரபல ஹோட்டலுக்கு அருகாமையிலுள்ள வாவி ☞ 2

## ராஜபக்ஷக்கள் ஒருபோதும் தப்பியோடவே மாட்டார்கள்!

### எதிரணியினரின் குற்றச்சாட்டுக்கு சசீந்திர பதிலடி



நாட்டின் பிரச்சினைகளுக்கு அஞ்சி, ராஜபக்ஷக்கள் ஒருபோதும் தப்பியோடவேமாட்டார்கள் என்று இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் பஸில் ராஜபக்ஷ நாட்டைவிட்டுச் சென்றுள்ளார் என்று எதிரணிகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞ 2

## கொழும்பு பல்கலை பட்டமளிப்பு விழா; வேந்தரான தேரரைப் புறக்கணித்த மாணவர்களுக்கு சந்திரிகா பாராட்டு



கொழும்பு பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள முருத்தெட்டுவே ஆனந்த தேரரிடம் பட்டத்தைப் பெறாது சென்ற மாணவர்களை வாழ்த்துகின்றேன்.

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை ☞ 2

## தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து மோடியிடம் முன்வைக்கவுள்ள கடிதத்தின் தலைப்பில் மாற்றம்

### சுமந்திரன் எம்.பி. விசேட அறிக்கை



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் முன்வைப்பதற்காகத் தமிழ்க் கட்சிகள் தமது கோரிக்கையாக தயார் செய்த கடிதத்தின் தலைப்பு '13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தக் கோருதல்' என இருந்த நிலையில், தற்போது 'தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதும் இலங்கை – இந்திய ஒப்பந்தமும்' என மாற்றப்பட்டுள்ளது. ☞ 2

## மின்வெட்டு

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மின் பிறப்பாக்கிகள் செயலிழந்ததன் காரணமாக இன்று மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணி வரையான காலப் பகுதியில், நாட்டின் பல பகுதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை லக் விஜய மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டு மின்பிறப்பாக்கிகள் செயலிழந்துள்ளதன் காரணமாக இன்று (22) மின்வெட்டு அமுலாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி அமைச்சின் பேச்சாளர் சுலக்ஷனா ஜயவர்தன தெரிவித்தார்.

இன்று மாலை 6 மணி தொடக்கம் 9.30 மணி வரையிலான காலப்பகுதியில் 30 அல்லது 45 நிமிடங்கள் ☞ 2

## நாட்டில் மேலும் 3 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதி

இலங்கையில் ஒமிக்ரோன் கொரோனா திரிவுடன் மேலும் 3 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. ☞ 2

## சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்கள் வாங்கவே மாட்டோம்

### மத்திய வங்கி ஆளுநர் திட்டவட்டம்



எவர் எத்தகைய யோசனைகளை முன்வைத்தாலும் அரசு கடன் பெற்றுக்கொள்வதற்காகச் சர்வதேச நாணய நிதியத்தை நாடப்போவதில்லை என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் கடன் பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது மிக ஆபத்தானது எனத் தெரிவித்துள்ள அவர், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லாமல் உள்நாட்டிலேயே முகாமைத்துவம் செய்துகொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் ☞ 2

## வவுனியா வடக்கு சபையையும் இழந்தது தமிழ்க் கூட்டமைப்பு!

### ஆட்சிப்பீடமேறியது சுதந்திரக் கட்சி

(வவுனியா நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்வசமிருந்தவவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆட்சியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று கைப்பற்றியுள்ளது. அதற்கமைய சபையின் புதிய தவிசாளராகத் தர்மலிங் ☞ 2

## வல்லைவெளியை அழகூட்டும் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

'செழுமையான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கு' எனும் தொனிப்பொருளுக்கமைய பசுமை உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் யாழ். வடமராட்சி, வல்லைவெளியை அழகுபடுத்தும் செயற்றிட்டம் இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. ☞ 2



## கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சிறுவனுக்குக் கொரோனாத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா, கொக்குவெளிப் பகுதியில் கிணற்றில் நீராடச் சென்று உயிரிழந்த சிறுவனுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வவுனியா, கொக்குவெளிப் பகுதியில் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த சிறுவன் அருகில்உள்ளகிணற்றில் குளிக்கச் சென்ற நிலையில் கிணற்று நீரினுள் மூழ்கி உயிரிழந்தார்.

இந்நிலையில், கிராம மக்களின் முயற்சியால் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மட்டக்களப்பில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலிருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உப்போடை வாவிப் பகுதியில் சடலம் உருக்குலைந்த நிலையில் உள்ளதால் அடையாளம் காணப்படாத நிலையில் காணப்படுகின்றது.

சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ராஜபக்ஷக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக இதற்கு முன்னரும் இப்படியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. குறைகூறுவதற்கு ஒன்றுமில்லாததால்தான் எதிரணிகள் பஸில் விவகாரத்தை கையிலெடுத்துள்ளன. இது வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடு.

பஸில் ராஜபக்ஷ சிறப்பாகச் செயற்படக்கூடியவர். அவரும் மனிதர். தனிப்பட்ட தேவைகள் இருக்கலாம். அதற்காக அவர் அமெரிக்கா சென்றிருக்கலாம். மீண்டும் வருவார். தப்பியோடுபவர்கள் ராஜபக்ஷக்கள் அல்லர் - என்றார்.

## வேந்தரான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பௌத்த தேரரை மாணவர்கள் அவமதித்தமை தொடர்பில் தனது முகப்புத்தகத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரு ஜனநாயக நாட்டில் அரசுக்கு எதிராக அல்லது அரசின் தீர்மானத்துக்கு எதிராக அந்த நாட்டில் வாழும் மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட உரிமை உண்டு

அதைத்தான் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் செய்துள்ளார்கள். குறிப்பாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக ஒரு பௌத்த துறவி நியமிக்கப்பட்டுள்ளார்.

அது மக்களின் விருப்பமாகவோ அல்லது அரசின் விருப்பமாகவோ அல்லது அரசின் பங்காளிக் கட்சிகளின் விருப்பமாகவோ அல்லது ஒருகட்ட சமூகத்திடமும் ஆலோசனை பெறாது இடம்பெற்றுள்ளது.

அது தனித்துவமான தீர்மானமாக இடம்பெற்றது. எனினும், பலரும் அதற்கு தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்கள்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் அதனைச் செயற்பாட்டில் காட்டியிருக்கின்றார்கள். ஒரு ஜனநாயக நாட்டில் ஓர் அரசுக்கு எதிராக எதிர்ப்பை வெளியிடுவதற்குப் பூரண சுதந்திரம் உண்டு.

எனினும், அந்த எதிர்ப்பை அவர்கள் வன்முறையாகவோ அல்லது குண்டுகளை வெடித்தோ அல்லது போராட்டங்களைச் செய்தோ அல்லது இடத்துக்கு இடம் கலவரங்களை ஏற்படுத்தியும் செய்யாது தமது பட்டமளிப்பு விழாவில் அவரை நிராகரித்து இருக்கின்றார்கள்.

அது ஒரு முன்னுதாரணமாகும். வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள அந்தத் தேரரிடம் பட்டத்தைப் பெறாது சென்ற மாணவர்களை வாழ்த்துகின்றேன்.

அவர்கள் எதிர்ப்பைக் காட்டிய விதத்தை நான் மதிக்கின்றேன். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஓர் அரசின் ஜனநாயகமற்ற செயற்பாட்டுக்கு அந்த மாணவர்கள் தமது பதிலடியை ஜனநாயக ரீதியில் வழங்கியுள்ளார்கள்.

நாட்டின் சிரேஷ்ட தலைவர் என்ற ரீதியில் அந்தச் சம்பவம் தொடர்பில் நான் கருத்து ஒன்றைப் பதிவிட விரும்பியே இந்தப் பதிவை வெளியிட்டுள்ளேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

## மோடியிடம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. இன்று வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

புதிய வரைவு தயாரிக்கப்பட்டபோது அதன் நோக்கம், பொருள் என்பன மாற்றப்பட்டே புதிய ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆவணமும் தற்போது ஒரு வரைவாகவே இருக்கின்றது.

இந்த வரைவை அல்லது இதன் திருத்தத்தை கட்சிகள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே இது கைச்சாத்திடப்படும்.

சில ஊடகங்கள் தொடர்ந்தும் தவறான தலைப்பில் இது சம்பந்தமான செய்திகளை வெளியிடுவதால் இந்த முக்கிய ஊடக அறிக்கை வெளியிடப்படுகின்றது - என்றுள்ளது.

## மின்வெட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை மின்வெட்டு அமுலாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், எந்தெந்த பகுதிகளில் மின்வெட்டு ஏற்படும் என்பது குறித்து சரியாக தெரிவிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## நாட்டில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூடானில் இருந்து வந்த இருவரும், தன்சானியாவில் இருந்து வந்த ஒருவருமே இவ்வாறு ஒமிக்ரோன் கொரோனா திரிவுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய மருத்துவ ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் ஒமிக்ரோன் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் ஏற்கனவே 4 பேர் ஒமிக்ரோன் கொரோனா திரிவுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்,

நிபந்தனைகளுக்கு அடிபணிந்து சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக்கொள்வது பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால் நாட்டுக்கு முதலீடுகளோ சுற்றுலாப் பயணிகள் வருகையோ இடம்பெறாமல் விடலாம்.

அவ்வாறு சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற்றுக்கொள்வதற்குச் சென்றால் அவர்கள் கண்டிப்பாக வட்டி வீதத்தை அதிகரிப்பதாகவும் நாணயத்தின் பெறுமதியை குறைக்க இடமளிக்குமாறும் நாட்டின் வளங்களை விற்பனை செய்யுமாறும் ஓய்வூதியக் கொடுப்பனவை குறைக்குமாறும் கூற வாய்ப்புண்டு. அதுமட்டுமன்றி பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டி வரும். நாட்டின் நெருக்கடி நிலைமையைச் சிறந்த முகாமைத்துவம் மூலம் தீர்க்க முடியும் - என்றார்.

## கிணற்றிலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிணற்றுநீர் வெளியில் இறைக்கப்பட்டு நேற்றிரவு 11.30 மணியளவில் குறித்த சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், அவரது சடலத்தைச் சுகாதார நடைமுறைகளைப் பேணி எரியூட்டுவதற்குச் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

## வவுனியா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் பார்த்தீபன் தெரிவுசெய்யப்பட்டார்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அநேக உறுப்பினர்களின் எதிர்ப்பால் இரு தடவைகள் தோல்வியடைந்திருந்தது.

இதையடுத்து உள்ளூராட்சி சட்டங்களின் பிரகாரம் புதிய தவிசாளரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

குறித்த தேர்தல் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இன்று காலை வடக்கு பிரதேச சபையின் காலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது சபையின் 26 உறுப்பினர்களில் 25 உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தனர். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஓர் உறுப்பினர் சுகவீனம் காரணமாக சபைக்கு வருகை தரவில்லை.

இதன்போது சபையின் புதிய தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்யுமாறு உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த சோ.சத்தியேந்திரன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் த.பார்த்தீபன் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன.

இருவரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டமையால் தவிசாளர் தெரிவு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பைப் பகிரங்க வாக்கெடுப்பாக நடத்துவதா அல்லது இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்வதா என்று ஆணையாளர் கோரியிருந்தார்.

இந்நிலையில், 12 உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்புக்கும், 13 உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பை நடத்துமாறும் இணக்கம் தெரிவித்தனர்.

குறிப்பாக உதயசூரியன் சின்னத்தில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பாக போட்டியிட்ட பெண் உறுப்பினர் ஒருவரும் இரகசிய வாக்கெடுப்பைக் கோரியிருந்தார்.

இதையடுத்து இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பில் தவிசாளர்களாகப் பரிந்துரை செய்யப்பட்ட இருவருக்கும் தலா 12 வாக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தன. ஒரு வாக்கு எவருக்கும் வழங்கப்படாமல் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து திருவுளச்சீட்டு மூலம் தவிசாளரைத் தேர்வு செய்வதாக ஆணையாளர் அறிவித்தார்.

அதற்கமைய சபை முன்னிலையில் இருவரினது பெயரும் திருவுளச்சீட்டில் எழுதப்பட்டு தெரிவு செய்யப்பட்டது. அதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த த.பார்த்தீபன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (100)

## வல்லைவெளியை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்றிட்டங்களுக்கான முன்மொழிவுகளை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் முன்வைத்திருந்தார்.

6 கோடி 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வல்லைவெளிப் பகுதியில் வரவேற்பு வளைவு, நடைபாதை, இளைப்பாறும் பகுதிகள், வாகனத் தரிப்பிடங்கள், இயற்கை ரசனை மையங்கள், சிற்றுண்டி மையங்கள், கழிப்பறை வசதிகள், வல்லைச்சந்தி மேம்படுத்தல் என்பன இந்தத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளன.

இன்றைய ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரச அதிபர், நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் எனப் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## திவாலாகும் நாடு

நாட்டையே முடக்கும் பொருளாதார நெருக்கடி அடுத்த மூன்று வாரத்துக்குள் நெருங்கி வருகையில் அது குறித்து நாடும், மக்களும், அரசியல் தலைவர்களும் அதிகம் சிந்திக்காமல் பொறுப்பின்றி விட்டேத்தியாக நடந்து கொள்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது.

தேசியப் பிரச்சினைகளில் கூட எதிர்க்கட்சிகளை, மாற்று இனத்தவரை, கலந்தாலோசிக்காமல் மமதையாக நடந்த பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு, இப்போது பொருளாதார நெருக்கடியால் நாடு நிலைகுலையும் போதுதான் வேறு வழியின்றி சர்வகட்சிக் கூட்டம் போடுவது குறித்து ஆலோசிக்கின்றது.

கடனிறுக்க வழியில்லாத – வகை சொல்ல முடியாத – இக்கட்டு கழுத்து வரை வந்த பின்னர்தான் எதிர்க் கட்சிகளுடன் பேசி ஓரணியாக நெருக்கடிகளை எதிர் கொள்வது குறித்து அது பிரஸ்தாபிக்கின்றது. அதாவது நெருக்கடிக்கு முகம் கொடுக்க மட்டும் – சேர்ந்து கழுத்தை மாட்ட வைப்பதற்கு மட்டும் – எதிரணியைத் துணைக்குக் கூப்பிடுகின்றது அரசு. இதுவரை தனது அதிகாரத்தை வைத்து சண்டப்பிரசண்டம் பண்ணி விட்டு, இப்போது தடுமாறுகின்றது. தவறை இன்னொரு தரப்பின் தலையில் போடுவதற்கு ஆள் தேடுகின்றது.

அரசாங்கத்தின் கையிருப்பில் இப்போது இருக்கும் சேமிப்பு ஆக 158 கோடி அமெரிக்க டொலர்கள்தான். இதில் தங்கக் கையிருப்பு மற்றும் அசையா சேமிப்புகள் போக திரவநிலையில் பணமாக இருப்பது நூறு கோடி டொலர்தான். ஆனால் இந்த ஜனவரி நடுப்பகுதியில் – அதாவது இன்னும் மூன்று வாரங்களில் – அரசு செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்களின் தவணைக் கட்ட ணம் மற்றும் கடப்பாடுகள் மட்டும் 144 கோடி அமெரிக்க டொலர்கள். இதில் சர்வதேசப் பிணை முறிகளுக்கான கொடுப்பனவு மட்டும் ஐம்பது கோடி அமெரிக்க டொலர் களாகும்.

துண்டு விழக்கூடிய 58 கோடி அமெரிக்க டொலரைச் சமாளிப்பதற்கே வழியில்லாமல் கடனிறுக்க வகையற்ற நாடாக இலங்கை அறிவிக்கப்படவிருக்கையில் அத்தி யாவசியப் பொருள்கள், எரிபொருள், மருந்துகள் போன்றவற்றை இறக்குமதி செய்ய வழியே இல்லாமல் போவது தவிர்க்க முடியாததாகும்.

'வரவு எட்டணா, செலவு பத்தணா, கடைசியில் துந் தணா துந்தணா..' என்ற மாதிரித்தான் நாட்டின் பொரு ளாதார நிலைமை இன்று.

காஸ் சிலிண்டர் நெருக்கடியால் பல வீடுகளில் மின்சார அடுப்புப்பாவனைதான் அதிகம். அதனால் மின்பாவனையும் அதிகரித்துள்ளது. இருக்கும் நீர் சேமிப்பு போதவில்லை. மின் உற்பத்திக்கு முழு அளவில் பயன்படுத்தினால் அது ஒரு மாதத்தில் வற்றிவிடும் என்ற நிலைமை.

மின் உற்பத்திக்கு டீஸலையோ, கரியையோ இறக்கு மதி செய்வதற்கும் அந்நியச் செலாவணிக் கையிருப்பு இல்லை.

ஆக பொருளாதார நெருக்கடியின் தொடர் விளைவு களாக மின்வெட்டு பெரிய அளவில் வரும். எரிபொருள் விலை உயர்வு மற்றும் விரைவில் வரக் கூடிய எரிபொருள் பற்றாக்குறை போன்றவற்றால் நாடு முற்றாகச் செயலி ழக்கும் ஆபத்து உள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை இப்போது இருப்பதை விட பல மடங்கு எகிறும்.

பொருளாதார நெருக்கடிகளின் தொடர் விளைவாக வங்கிச் சேவை முறைமைகள் கூட முடங்கும் அல்லது குழப்பத்தில் மூழ்கும்.

அடுத்த ஆண்டில் மாத்திரம் – 2022 இல் மட்டும் – அரசு கொடுக்க வேண்டிய கடன் தவணைக் கட்டண நிலுவை 690 கோடி அமெரிக்க டொலர்கள். ஏறத்தாழ ஒன்றரை லட்சம் கோடி ரூபா. இந்தக் கடன் சுருக்கில் இருந்து இலங்கை மீண்டும் வழமைக்குத் திரும்ப வேண்டுமா னால் பேரதிசயம் ஏதேனும் நடக்க வேண்டும். இல்லையேல் நாடு திவாலாவது தவிர்க்க முடியாத நிகழ்வாக அரங்கேறும்.

# எரிபொருளுக்குப் பாரிய தட்டுப்பாடு ஜனவரியில் ஏற்படும் வாய்ப்புள்ளது

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

மசகு எண்ணெய் இறக்குமதிக்குத் தேவையான டொலரைத் திரட்டிக்கொள்வதில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரிய நெருக்கடியைத் தற்போது எதிர்கொண் டுள்ளது.

எதிர்வரும் மாதம் முதல் நாட்டில் நிச்சயம் எரிபொருள் விநியோகத்தில் பாரிய தட்டுப்பாடு ஏற்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்வுகூறியுள்ளது.

எரிபொருள் தொடர்பாகத் தொடர்ச்சியாகக் காணப்படும் பிரச்சினைக்குத் தீர்வு பெற் றுக்கொள்ள அரசாங்கம் உரிய திட்டத்தை வகுக்கவில்லை என்றும் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

இதேவேளை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கும் முயற்சிகள் முன்னெடுக் கப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுந் துள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்துக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு எரிசக்தி அமைச்சரிடம் கோரிய நிதி இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக எதிர்வரும் மாதம் நாட்டில் நிச்சயம் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என இலங்கை பெற்றோலிய கூட் டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# கந்தர்மட சந்தியில் விபத்து இரு இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம் கந்தர்மட சந்திக்கு அருகில் நேற்று(செவ்வாய்க்கிழமை) இரவு இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழில் இருந்து கோண்டாவில் நோக்கி சென்று கொண்டிருந்த இலங்கை போக்கு வரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும், யாழ்.நகர் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் விபத்துக்கு உள்ளாகி யுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில், அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத் தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

# பறிமுதல் செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகள் அரசுடைமையாக்கப்படுமென அறிவிப்பு

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பி னுள் நுழைகின்ற இந்திய மீன்பிடிப் படகுகள் சட்ட ரீதியாக அரசுடைமையாக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் – மயிலிட்டித் துறை முகத்திற்கான விஜயத்தை நேற்று (செவ் வாய்க்கிழமை) மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், தடுத்து வைக்கப்பட்டுள்ள இந் திய இழுவை வலைப் படகுகளை பார்வை யிட்ட பின்னர் பிரதேச கடற்றொழிலாளர்கள் மற்றும் துறைமுக நிர்வாகத்தினருடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அத்துடன், மயிலிட்டித் துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச் சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

இலங்கை கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் இலங்கையின் கடல் வளத்தையும் பாதிக்கும் வகையில் எல்லை தாண்டி வந்து சட்ட விரோதத் தொழில் முறை களில் ஈடுபடுகின்ற இந்திய கடற்றொழிலா ளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்து வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கான அறிவுறுத்தல்களை வழங்கிய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற கடற்படையினருக்கும் வடக்கு கடற்றொழி லாளர்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், அரசுடமையாக்கப்படுகின்ற படகுகளை பிரதேச கடற்றொழில் சங்கங்க ளிடம் கையளித்து, ஆழ்கடல் மீன்பிடி போன்ற சட்ட ரீதியான தொழில்களில் ஈடு படுவதற்கு பயன்படுத்தப்படும். அவ்வாறு பயன்படுத்த முடியாத படகுகளை விற்பனை செய்து இந்தியக் கடற்றொழில் படகுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மயிலிட்டித் துறைமுகத்தின் முதலாவது கட்டப் புனரமைப்பு தவறான நோக்கங்க ளுக்காக முன்னெடுக்கப்பட்டமையால் சரியான முறையில் திட்டமிடப்படவில்லை.

இதன் காரணமாக இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் இந்தத் துறை முகத்தால் பூரணமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்நிலையில், இரண்டாம் கட்ட அபிவி ருத்திப் பணிகள் விரைவில் மேற்கொள் ளப்படவுள்ள நிலையில், பிரதேச மக்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை பெற்ற கடன்கள் திரும்பிச் செலுத்தப்படுமாம்!

## மத்திய வங்கி ஆளுநர் உறுதி



இலங்கையால் பெற் றுக்கொள்ளப்பட்ட கடன் கள் அனைத்தும் திருப் பிச் செலுத்தப்படும் என மத்திய வங்கியின் ஆளு நர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன் றின் பின்னர் ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரி வித்த ஆளுநர், இந்த விடயத்தில் பொதுமக் கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என வும் கேட்டுக்கொண்டார்.

மேலும் இலங்கையிடம் 300 கோடி அமெரிக்க டொலர் வெளிநாட்டு கையி ருப்பு இருப்பதாக ஆளு நர் அஜித் நிவாட் கப் ரால் குறிப்பிட்டார்.

எனவே, பொதுமக் கள் அச்சம் கொள்ள வேண்டாம் எனக் குறிப் பிட்ட அவர் சமூக ஊட கங்களில் வெளியாகும் கருத்துக்கள் பொய் யான வதந்திகள் எனக் கூறினார்.

இவ்வாறான வதந்திகள் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார்.




# புத்தாண்டு கொண்டாட்டங்களை ரத்துச் செய்யவும்!

## உலக சுகாதாரஸ்தாபனம் கோரிக்கை

ஒமிக்ரோன் வைரஸ் வேகமாக பரவி வருவதால், கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களை ஒத்தி வைக்க வேண்டும் அல்லது ரத்து செய்ய வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் உருமாறிய ஒமிக்ரோன் வகை வைரஸ் உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. இதனால், உலக நாடுகள் மீண்டும் பல்வேறு வகையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றன. அமெரிக்காவில், ஒமிக்ரோனால் முதல் உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது. 50 வயது மதிக்கத்தக்க நபர், ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். உடல்நலம் பாதித்த நிலையில் காணப்பட்ட அந்த நபர், கொவிட் தடுப்பூசி செலுத்தி கொள்ளவில்லை என அமெரிக்க சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் டெட்ரஸ் அதானம் கூறியதாவது: ஒமிக்ரோன் வைரஸ், டெல்டாவை விட பல மடங்கு வேகமாக பரவி வருகிறது. தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களும், வைரஸ் தொற்றில் இருந்து மீண்டவர்களும், ஒமிக்ரோனால் மீண்டும் பாதிக்கப்படலாம்.

இந்த பெருந்தொற்றினால், அனைவரும் சோர்வடைந்துள்ளோம். குடும்பம் மற்றும் நண்பர்களுடன் நேரத்தை செலவிடவும்,வழக்கமான வாழ்க்கையை வாழவும் அனைவரும் விரும்புகிறோம்.

எனவே, கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களை தள்ளி வைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம். வாழ்க்கையை இழப்பதை விட நிகழ்ச்சிகளை தள்ளி வைப்பதே சிறந்தது. தற்போது கொண்டாடிவிட்டு பிறகு வருத்தப்படுவதை விட, தற்போது ஒத்தி வைத்துவிட்டு பிறகு கொண்டாடலாம். கடினமான முடிவுகள் அவசியம்.

2022 இறுதிக்குள் உலகில் அனைத்து நாடுகளிலும் 70 சதவீத மக்கள் தடுப்பூசி செலுத்தி கொள்ளும்போது, அடுத்தாண்டு மத்தியில் இந்த பெருந்தொற்று முடிவுக்கு வரும். கொவிட் பெருந்தொற்று குறித்து சீனா கூடுதல் தகவல்களை தர வேண்டும். இது, எதிர்காலத்தில் பெருந்தொற்றை சமாளிக்க உதவியாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# அமெரிக்காவில் பதிவானது ஒமிக்ரோனால் முதல் மரணம்!

அமெரிக்காவில் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார். நாட்டில் பதிவான முதல் ஒமிக்ரோனுடன் தொடர்புடைய மரணமாக இது பதிவாகியுள்ளது.

டெக்சாஸ் மாகாணத்தில் உயிரிழந்த நபர், இதுவரை எந்தவொரு தடுப்பூசியும் போட்டுக் கொள்ளாதவர் என மாகாண சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.






பாதிக்கப்பட்ட 60 வயதுடையவர். தடுப்பூசி போடாமையால் இவர் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு கடுமையான சிக்கல்களுக்கு முகம் கொடுத்தார்எனபொலிஸார் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 18 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒரு வாரத்திற்கான தரவுகளின் அடிப்படையில் அமெரிக்காவில் உறுதி செய்யப்பட்ட தொற்று நோயளர்களில் 73 வீதமானவர்கள் ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டதாக அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மையம் நேற்று திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டவர்களிடையே உலகின் முதல் மரணம் கடந்த வாரம் இங்கிலந்தில் பதிவானது. தற்போது ஒமிக்ரோனுடன் தொடர்புடைய மரணங்கள் இங்கிலாந்தில் 12 ஆக அதிகரித்துள்ளது. மேலும் இத்திரிபால் பாதிக்கப்பட்ட 104 பேர் தற்போது மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் உள்ளனர் என இங்கிலாந்து துணைப் பிரதமர் டொமினிக் ராப் நேற்றுமுன்தினம் திங்களன்று ரைம்ஸ் ரேடியோவிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நான்காவது தடுப்பூசியை செலுத்த இஸ்ரேல் தீர்மானம்



புதிய ஒமிக்ரோன் மாறுபாட்டை கட்டுப்படுத்தும் முயற்சியின் ஒருபகுதியாக நான்காவது தடுப்பூசியை வழங்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் தொற்று நோய் நிபுணர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு நான்காவது தடுப்பூசியை பரிந்துரைத்துள்ளனர்.

இந்த திட்டத்தை வரவேற்றுள்ள இஸ்ரேல் பிரதமர் நப்டலி பென்னட், அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார். ஒமிக்ரோன் தொற்று உறுதியான முதலாவது மரணம் பதிவு செய்யப்பட்டதை அடுத்து அந்நாட்டு அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இஸ்ரேலில் குறைந்தது 340 ஒமிக்ரோன் தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# வேல்ஸில் விளையாட்டு நிகழ்வுகளுக்கு பார்வையாளர்களுக்குத் தடை விதிப்பு

ஒமிக்ரோன் கொவிட் மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்த, எதிர்வரும் டிசெம்பர் 26ஆம் திகதி முதல் வேல்ஸில் உள்ள அனைத்து விளையாட்டு நிகழ்வுகளிலும் பார்வையாளர்கள் தடை செய்யப்படுவார்கள் என வேல்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அனைத்து உட்புற, வெளிப்புற, தொழில்முறை மற்றும் சமூக விளையாட்டு நிகழ்வுகளுக்கும் இது பொருந்தும்.

விளையாட்டு கழகங்கள் மற்றும் அரங்குகளை ஆதரிக்க 30 லட்சம் பவுண்டுகள் பார்வையாளர் விளையாட்டு நிதி கிடைக்கும் என பொருளாதார அமைச்சர் வாகன் கெதிங் தெரிவித்துள்ளார். கிறிஸ்மஸுக்குப் பிந்தைய விருந்தோம்பல் கட்டுப்பாடுகள் குறித்து விவாதிக்க அமைச்சர்கள் பின்னர் கூடுவார்கள்.

# அதிகாித்து வரும் கொரோனாத் தொற்று கட்டுப்பாடுகளை கடுமையாக்கியது சிம்பாப்வே

அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் மேலும் இரண்டு வாரங்களுக்கு நாட்டில் கட்டுப்பாடுகளை சிம்பாப்வே கடுமையாக்கியுள்ளது. புதிய நடவடிக்கைகளின் கீழ் அத்தியாவசிய சேவைகள் தவிர அரச நிறுவங்களின் செயற்பாடுகள் 30% ஆக குறைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாடு கண்டறியப்பட்டதை அடுத்து நாட்டில் நான்காவது அலை ஏற்பட்டுள்ளது.



இந்த மாறுபாடு நாட்டில் வேகமாக பரவி வருகின்ற நிலையில் நாட்டில் இதுவரை மொத்தம் 177,690 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொரோனாத் தொற்று உறுதியான 4,745 இறப்புகள் இதுவரை சிம்பாப்வேயில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




### மட்டக்களப்பில்

# அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் உடற்பயிற்சிப் பாசறை

தேசிய தேகாரோக்கிய வேலைத்திட்டத்தினை முன்னிட்டு மட்டக்களப்பில் அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் உடற்பயிற்சிப் பாசறை நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன் இப்பயிற்சி நெறியை மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் வைபவரீதியாக தொடக்கி வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்திருக்கும் இப்பயிற்சிப்பட்டறை, விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் இயங்கும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையில் இடம்பெறுகிறது. இதில் மாவட்டத்திலுள்ள சகல திணைக்களங்களின் சார்பிலும் இவ்விரு உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு வழிகாட்டல் பயிற்சி வழங்கப்படுகிறது.

இங்கு வழங்கப்படும் உடற்பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்களை பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் தமது திணைக்களத்தில் கடமையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பயிற்றுவிக்க வேண்டும் என்பதுடன் தொடர்ச்சியாக இதனை நடைமுறைப்படுத்துவதனூடாக ஆரோக்கியமான சமூகமொன்றை கட்டியெழுப்ப முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியின் வளவாளர்களாக வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். விவேகானந்தன், காத்தான்குடி பிரதேசசெயலாளர் யூ. உதயஸ்ரீதர், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கணேஸ் விக்கிரமநாயக, யோகா பயிற்றுவிப்பாளர் வை. பத்மராஜா ஆகியோர் பங்கெடுக்கின்றனர்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மூன்று நாள்கள் கணனிப் பயிற்சி

அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தின் ஊடாக அம்பாறை மாவட்டச் செயலக மற்றும் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடமையாற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 3 நாள் கணனிப் பயிற்சி நெறி 20, 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் அம்பாறை இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.



அம்பாறை மாவட்ட செயலக அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான இணைப்பாளராக செயற்படுகின்ற ஏ. முஹம்மட் பிறோஸின் ஒருங்கிணைப்பில் அம்பாறை மாவட்ட செயலக பதில் மாவட்ட செயலாளர் வீ. ஜெகதீஸன் தலைமை தாங்கினார்.

பயிற்சி நெறியில் கணனிப் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றி உத்தியோகத்தர்களுக்கு கருத்துக்கள் வழங்கப்பட்டன.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கணனியறிவை மேம்படுத்தும் நோக்கில் நடாத்தப்படும் இப்பயிற்சி நெறியில் அம்பாறை இளைஞர் சேவைகள் மன்ற பயிற்சி நிலையத்தில் பொறுப்பதிகாரி ஏ.பி. செனவிரத்ன கலந்து கொண்டார். இவ் மூன்று நாள் கணனிப் பயிற்சியை அம்பாறை இளைஞர் சேவைகள் மன்றத்தின் கணனி போதனாசிரியர் என். டபிலியூ. பி. லலின்ட் நடத்தினார்.



# பிரஜா ஹரித அபிமானி திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு

ஜனாதிபதியின் எண்ணக் கருவில் உருவான பசுமையான தேசத்தினை உருவாக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 'பிரஜா ஹரித அபிமானி' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மரநடுகை திட்டம் நேற்று முன்தினம் இறக்காமம் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நீர்மூலங்களை பாதுகாத்தல் மற்றும் கிராமங்களை அழுகுபடுத்தி பசுமையான இலங்கையை கட்டியெழுப்பும் வகையில் ஜனாதிபதியினால் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம் ஊடாக இந்த திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இதன் அம்பாறை மாவட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு மாவட்ட தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களப் பொறுப்பதிகாரி எம்.எல். முஸப்பிரின் ஏற்பாட்டில் குடுவில் அல்-ஹிறா வித்தியாலயத்தில் கல்லூரி அதிபர் எம்.ஏ. பஜீர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீஸன் கலந்து கொண்டார்.

விசேட விருந்தினர்களாக இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். றஷ்ஷான், பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ். ஜெமீல் காரியப்பர், சிறப்பு விருந்தினர்களாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல், வனவிலங்கு பாதுகாப்பு, வன வளஜீவன அபிவிருத்தி மற்றும் யானை வேலிகள் அமைத்தல் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் இணைப்பாளர் ராஜபக்ஷ, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், நிருவாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜெமீல், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். ஆஹிர், பிரிவுக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் எம்.ஜே.எம். அத்தீக் உட்பட சமூக மட்டக் குழுக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பத்து லட்சம் மரக்கன்றுகளை நடும் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், பிரதேச மட்ட அமைப்புகளுக்கும் மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன.



# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் ஆரம்பமாகியுள்ளது என்கின்றார் நஸீர் அஹமட்

மக்களின் காலடிக்குச் சென்று அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற ஒரு வேலைத்திட்டம் தொடக்கி வைக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவில் ஆடு வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் வி. நிஹாறா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளான 41 ஆடுவளர்ப்பாளர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள் வழங்கப்பட்டன.

அங்கு பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கி வைத்து தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட், முன்பு நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்களை விட இது சிறப்பானது.

ஒருங்கிணைந்த பாரிய வேலைத்திட்டமாக இது அமுலாக்கப்படுவதால் இதன் பலாபலன் 2024ஆம் ஆண்டளவில் தெளிவாகத் தெரிய வரும்.

வழமையாக இதுவரை அமுல்படுத்தப்பட்ட திட்டங்களிலோ பயனாளிகள் அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை என்கின்ற குறைபாடும் இருந்து வருகின்றது. அதே வேளை அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்ற போக்கும் தங்களது பணிகளை சரியாகச் செய்யாத நிலைமையும் காணப்படுகின்றது என தெரிவித்தார்.

# தோப்பூர் பகுதியில் மிதிவெடி மீட்பு

திருகோணமலை - தோப்பூர் பகுதியில் மிதிவெடியொன்று மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - தோப்பூர் உப பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் நேற்று இந்த மிதிவெடி மீட்கப்பட்டுள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.

தோப்பூர் பிரதான வீதியின் புனரமைப்பு பணி இடம்பெறும் நிலையில் இந்த மிதி வெடி மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் (தேசிய பாடசாலை) சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற, மற்றும் 2021 இல் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அபிவிருத்தி சங்க ஏற்பாட்டில் அதிபர் யூ.எல்.எம். அமீன் தலைமையில் பாடசாலையின் பிரதான கேட்போர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். புவநேந்திரன் கலந்துகொண்டமையுடன் கல்முனை வலய கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபீபுள்ளா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜிஹானா ஆலிப், கல்முனை வலய கல்வி அலுவலக



பொறியியலாளர் ஏ.எம். ஷாஹிர், பிரதி அதிபர்களான திருமதி எஸ்.எஸ்.எம். மசூது லெவ்வை, ஆர்.எம். அஸ்மி காரியப்பர், உதவி அதிபர் ஏ.எச். நதீரா உட்பட பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனபலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# பண்டிகைக் காலங்களில் புழக்கத்துக்கு விடப்படுகின்றன போலி நாணயத்தாள்கள்

## மக்களே அவதானம்!

பண்டிகைக் காலங்களில் போலி நாணயத்தாள்கள் புழக்கத்திலுள்ளன எனவும் மக்கள் மிக அவதானமாக செயற்படவேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிருலப்பனை, பாதுக்கை, களுத் துறை மற்றும் ரங்கல பிரதேசங்களில் கடந்த வாரத்தில் பொலிஸார் மேற் கொண்ட சோதனை நடவடிக்கையின் போது போலி நாணயத்தாள்கள் அச் சிடும் இடங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அப் பகுதிகளில் 5,000 ரூபா, 1,000 ரூபா போலி நாணயத் தாள்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன எனவும் அதனை அச்சடிக்கப் பயன்படுத்திய கணனி மற்றும் ஏனைய உபகரணங் களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர்கள் சிலரை கைதுசெய்துள்ளனர் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தற்போது அதுதொடர்பில் குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களம் மேல திக விசாரணை நடவடிக்கைகளை முன் னெடுத்து வருவதாகவும் அதிக பெறுமதி யான மேற்படி போலி நாணயத்தாள்கள் அச்சடிக்கப்பட்டு புழக்கத்திற்கு விடப்பட்டுள்ளன எனவும் பண்டிகைக் காலத்தில் பல்வேறு வகையில் அதனை உபயோகிப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் தக வல்கள் கிடைத்துள்ளன எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் மக்கள் நகர்களுக்குச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது அவ்வாறு போலி நாணயத்தாள்கள் கைம்மாறு வதற்கு இடமுண்டு.

இந்தக் காலங்களில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பொதுமக் களும் அதுதொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துவது முக்கியமென்றும் பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத் துள்ளது.

அவ்வாறுபோலிநாணயத்தாள்களை அடையாளம் காண்பதற்கு அதில் பொறிக்கப்பட்டுள்ள விசேட அடையாளம் அச்சடிக்கப்பட்டுள்ள கடதாசியின் தன்மை, பாதுகாப்பு நூல், நாணயத் தாள்களின் வர்ணம் ஆகியவற்றை அவதானித்தால் போலி நாணயத் தாள்களுக்கு ஏமாறுவதைத் தவிர்க்க முடியும்.

அவ்வாறான நாணயத்தாள்கள் புழக்கத்தில் காணப்படும்போது அதுதொடர்பில் உடனடியாக அறிவிப் பதற்கு 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தகவல்களை வழங்க முடியும் அல்லது அருகிலுள்ளபொலிஸ்நிலையங்களுக்கு அதுதொடர்பில் அறிவிக்க முடியமென் றும் பொலிஸ் தலைமையகம் கேட்டுக் கொண்டுள்ளது.






# லயன் மகாதேவா – லயன் பூமாதேவி ஞாபகார்த்தமாக சுன்னாகம் லயன்ஸால் மூக்குக் கண்ணாடி வழங்கல்!

## ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இன்று நடந்தது

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் முன்னோ டிகள் அமரர்களான லயன் மகாதேவா – லயன் பூமாதேவி தம்பதிகளின் ஞாபகார்த்தமாக அவர்களது புதல்வன் லயன் ம.பிரிதுவிராஜாவின் அனுசரணையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பார்வைக் குறைபாடுடைய 9 மாண வர்களுக்கு இன்று (புதன்கிழமை) காலை மூக் குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு நடை பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல்வரும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பின ருமான லயன் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இ.செல்வராகினி, செயலாளர் லயன் சி.ஹரிகரன், வலயத் தலைவர் லயன் பா.மரியதாஸ், நிர்வாக உறுப்பினர்களான லயன் சி.விசாலினி, லயன் க.தினேஸ், லயன் க.வசீகரன், லயன் க.சரண்யா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி களை வழங்கிவைத்தனர்.

# ஒமிக்ரோன் டெல்டாவை விட 70 மடங்கு வேகமாக பரவும்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு




கொரோனாத் தொற்றின் ஒமிக்ரோன் மாறுபாடு டெல் டாவை விட 70 மடங்கு வேக மாக பரவுவது உறுதி செய் யப்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க் கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அச்சங்கத்தின் தலைவர் வைத்தியர் பத்மா குணரத்ன இதனைக் கூறினார்.

மக்கள் அதிகம் கூடும் இடங் களில் கொரோனாத் தொற்றாளர் களின் எண்ணிக்கை அதி கரிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாளாந்தம் 500 முதல் 700 நோயாளிகள் அடையா ளம் காணப்படுகின்றனர் எனவும், சுமார் 20 பேர் கொரோ னாத் தொற்றால் உயிரிழக் கின்றனர் எனவும் வைத்தியர் தெரிவித்தார்.

இதவேளை ஒமிக்ரோன் மாறுபாட்டின் வீரியம் தொடர் பாக அறியாமல் பண்டிகைக் காலத்துக்கு முன்னரே மக்கள் அதிகளவில் கூடுகின்றனர் என வைத்தியர் கவலை வெளி யிட்டார்.

# வலிகாமம் வடக்கில் தொடர்ந்தும் காணாமல்போகும் பிள்ளையார்கள்!



யாழ்ப்பாணம் வலி. வடக்கு பகுதியில் தொடர்ந்தும் பிள்ளையார் சிலைகள் காணாமல் ஆக்கப்படும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

காங்கேசன்துறை குமார கோவிலில் உள்ள பிள்ளையார் சிலை அண்மையில் காணாமல் போயிருந்தது.

குறித்த ஆலயத்தின் வளாகத்தினுள் விகாரை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தெல்லிப்பழை மகாஜனா கல் லூரிக்கு அருகிலுள்ள ஆலயத்தினுள் இருந்த இரண்டு பிள்ளையார் சிலைகள் காணாமல் போயுள்ளன.

அதேவேளை பலாலி பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் இருந்த பிள்ளையார் சிலையும் காணாமல் போயுள்ளது.

பிள்ளையார் சிலைகள் காணாமல் போனமை தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப் பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# தெற்கு அதிவேக வீதியில் விபத்து; இருவர் சாவு!

தெற்கு அதிவேக வீதியில் இன்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். பாலடுவ மற்றும் கப்புதுவ ஆகிய பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதி யிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் 72 மற்றும் 61 வயதுகளை யுடைய இருவரே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.12.2021இல் வெளியிடப்பெற்றது.